©
தமிழ்நாடு அரசு
2011

பதிவெண்: எம்.

# காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

காஞ்சிபுரம், டிசம்பர் 16, 2011

[ எண் 29

கார்த்திகை 30, திருவள்ளுவர் ஆண்டு—2042

## *உள்ளாட்சித் துறை அறிவிக்கை.*

---

**குடிநீர் குழாய் இணைப்பு வழங்குதல் முறைப்படுத்துதல் குறித்த துணை விதிகள்**

மறைமலைநகர் நகராட்சி

(ந.க. 1364 / 2006/ இ1, 28–11–2011)

மறைமலைநகர் நகராட்சி நகராட்சிப் பகுதியிலுள்ள வீடுகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குழாய் இணைப்பு வழங்குவதற்காகவும் அதனை முறைப்படுத்துவதற்காகவும் திருத்தப்பட்டுள்ள தமிழ்நாடு1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 130, 131(1) (2) (3) 132(1) 132(எ) 134 135 306(டி) (ஈ) (எப்) (ஜி) (எச்) (ஐ) 308 மற்றும் 309 ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள்.

நகராட்சியில் புதியதாக வீட்டுக் குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம். பழுதுபார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் வைத்து இருத்தல் இவைகள் அடங்கும். இதில் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத பிற இணங்களும் அடங்கும் இந்த விதிகளின் கீழ் குடிநீர் வீணாவதை தடுக்கவும், குடிநீர் அளவை கணக்கிடவும் குடிநீர் குழாய் இணைப்பில் அளவு மானி பொருத்துதல், குடிநீர் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல் மற்றும் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் ஆகியவை இந்த துணை விதிகளின் இடம் பெறுகின்றன.

1. குடிநீர் வழங்கப் பெறுவதற்காக திருத்தப்பட்ட 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் பிரிவு 131(1) அல்லது பிரிவு 132ன் கீழ் குடிநீர் இணைப்பிற்கான ஒவ்வொரு மனுவும் கட்டிட உரிமையாளரால் கையொப்பமிட்டோ உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமான ஒப்புதல் கடிதம் பெற்று குடியிருப்பவரால் கையொப்பமிட்டோ விண்ணப்பிக்கப்பட வேண்டும். நகராட்சி தகவல் மையத்திலும் இணைய தளத்திலும் பெறலாம். புதிய குடிநீர் இணைப்பிற்கான விண்ணப்பபடிவத்தை (படிவம்அ) விண்ணப்பம் கூடுமானவரை இணைக்கப்பட்டுள்ள படிவம் மற்றும் மதிப்பீடு தயார் செய்து

பதிவுக்கட்டணமாக மனு ஒன்றிற்கு ரூ 100/– செலுத்தி நகராட்சி ஆணையருக்கு அனுப்பப்படவேண்டும். பதிவுக்கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கீட்டு முன்னுரிமை பட்டியல் தயார் செய்து அதனடிப்படையில் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீட்டுக் கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி உத்தரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும்.

(அ) குடிநீர் இணைப்பினை பெற கீழ் கண்ட தொகை கணக்கீட்டு வசூலிக்கப்படும். இத் தொகை நகராட்சி தகவல் பலகையிலும், வரிவசூலிக்கும் மையத்திலும் அறிவிப்பு செய்து விளம்பரப் படுத்தப்படும் சுற்றறிக்கை 748 ன் படி பின்பற்றப்படும்.

(i) விண்ணப்பக்கட்டணம் : இலவசம்

(ii) <u>வைப்புத் தொகை</u> (திரும்ப வழங்க இயலாத முன் இணைப்புக் கட்டணம்)

| வ.எண் | உபயோகத்தின் தன்மை | வைப்பு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | குடியிருப்பு பகுதி | 5,000/– |
| 2 | குடியிருப்பு அல்லாத வணிக பகுதி | 7,500/– |
| 3 | தொழிற் சாலை | 10,000/– |
| 4 | வறுமைக் கோடிற்கு கீழ் உள்ளவர்கள் | – – |

| (iii) நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் (2009–10) க்கான விலை விகதப்படி | கருங்கல் சாலை | தார் சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|
| 0–30 மீ | 1050 | 2250 | 2600 |
| 30மீ அதிகமாக–90மீ | 1650 | 2850 | 3200 |

(iv) நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மேற்பார்வைக் கட்டணம் ரூ 750/– (ரூபாய் எழுநூற்றி ஐம்பது மட்டும்)

**குறிப்பு:** ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை முந்தைய ஆண்டின் தொகையில் 5% உயர்த்தப்பட வேண்டும். (ஏப்ரல் 1ம் தேதி முதல்) விண்ணப்படிவம் எந்த நிதியாண்டில் வழங்கப்பட்டு தொகை செலுத்தப்படுகிறதோ அந்த நிதியாண்டிற்கான தொகை வசூலிக்கப்படும்.

(ஆ) குடிநீர் திட்டத்தில் அரசு கட்டிடங்களுக்கு வைப்புத்தொகை மற்றும் இதர கட்டணங்கள் முன்பணமாக நகராட்சிக்கு செலுத்த வேண்டியது இல்லை. இணைப்பு உத்தரவு பெற்ற பின்பு செலுத்தவேண்டும்.

(இ) குழாய் இணைப்பு பணிகளுக்கு தேவையான பொருட்களை இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் விளக்கக் குறிப்பிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

(ஈ) குழாய் இணைப்புக்கான வைப்புத் தொகையை தவிர இதர கட்டணங்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி தரப்பட மாட்டாது அல்லது செலுத்திய தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

(உ) குழாய் இணைப்பு பணிகளை உரிமையாளரே தகுதி வாய்ந்த குழாய் பொருத்துநரால் தனது சொந்த செலவில் செய்யப்பட்டு நகராட்சி பகிர்மான குழாய் வரை அமைக்கப்பட வேண்டும்.

2. குடும்ப பயன்களுக்கு மற்றும் அனைத்து பிற பயன்களுக்காக வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு அளவுமானி கட்டணமாகவே வசூலிக்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் எந்த பயன்களுக்காக பயன்படுத்தப்படுகிறதோ அவற்றிற்காக விகிதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும். ஏற்கனவே அளவுமானி பொருத்தப்படாமல் டேப்ரேட் விகிதத்தில் உள்ள இணைப்புகளுக்கு 60 நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பி அளவுமானி இணைப்பாக மாற்றப்படும் அவ்வாறு மாற்றப்படாமல் இருந்தால் மறு அறிவிப்பின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

3. வழங்கப்படும் குடிநீர் குடும்ப காரியங்களுக்கானதா அல்லது குடும்ப காரியங்களுக்கல்லாததா என்பது பற்றி பிரச்சனை எழுந்தால் திருத்தப்பட்டுள்ள தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 131ஆவது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவுரைப்படி ஒவ்வொரு தருணத்திலும் முடிவு செய்யப்பட வேண்டும்.

4. குடும்ப பயன்களுக்காக வழங்கப்படும் குடிநீர் இணைப்பு ஒரு குடும்பத்திற்கு மட்டுமே இணைப்பு வழங்கப்படுவதாக கருதப்படும். ஒரு குடும்பத்திற்கு மேல் உபயோகப் படுத்தப்படும் குடிநீருக்கு கூடுதலாக உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடிநீர் கட்டணமாக ரூ.60/– வசூலிக்கப்படும். இவ்விஷயத்தில் குடும்பங்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்வது பற்றிய ஆணையரின் முடிவே இறுதியானது.

அ) ஒரே இணைப்பின் வாயிலாக குடும்ப பயன்களுக்கும், அவையல்லாத பிற பயன்களுக்கும் சேர்த்து வழங்கப்படும் குடிநீர் குடும்ப பயன்கள் அல்லாத பிறபயன்களுக்கான குடிநீருக்குரிய வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஆ) நகராட்சி மன்றத்தின் உரிமை ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய நிறுவனங்களுக்கு கொடுக்கப்படும் பயன் இணைப்புகளும் கூட அளவுமானி கட்டணமுறையில் இருக்க வேண்டியதோடு மேற்படி நிறுவனங்கள் பயன்படுத்தும் குடிநீருக்கான காரியங்களை பொறுத்து குடும்ப பயன் அல்லது அவையற்ற பிற பயன்களுக்கான வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

இ) சொத்துவரி விதிக்கப்படாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட மாட்டாது. ஏற்கனவே நீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை இடித்து விட்டு புதிதயதாக கட்டிடம் கட்டும்போதும், கூடுதல் கட்டிடம் கட்டும் போதும், பெரிய பழுதுகள் பார்க்கும் போதும் நகராட்சி குடிநீர் பயன்படுத்தப் பட்டாலோ அவ்வாறு பயன்படுத்தப்படுவதாக ஆணையர் கண்டுபிடித்தாலோ குடியிருப்பு அல்லாத உபயோகமாக கருதப்பட்டு வணிக காரியங்களுக்கான வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஈ) கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களது அங்கீகாரத்துடன் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறைகளுடன் நகராட்சி மன்றம் தனது நகராட்சி எல்லைக்குட்பட்ட யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ வழங்கலாம்.

5. குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் பகிர்மான குழாயில் இருந்து ஒரே ஒரு குழாய் இணைப்பு மட்டுமே கொடுக்கப்படுவதோடு இந்த இணைப்பு திருகு குறுங்குழாய் மற்றும் குடிநீர் கட்டுப்படுத்தும் உபகரணம் (Flow Control Valve) ஆகியவற்றால் முறைப்படுத்தப்படும் எந்த வீட்டிற்கும்

வேறு வரிவிதிப்பின் கீழ் வரும் அண்மையில் உள்ள வீட்டிலிருந்தோ அல்லது கட்டிடங்களிலிருந்தோ தற்போது அல்லது இனிமேல் கொடுக்கப்படவிருக்கும் பயன் இணைப்பில் இருந்தோ தண்ணீர் வழங்கப்பட மாட்டாது.

விளக்கஉரை

துணைவிதிகளின் இடம்பெறும் வீடு என்னும் சொல் ஒரே பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டங்களோயோ அல்லது தற்போதைக்கு சொத்துவரிக்காக ஒரே பகுதியாக தீர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தையோ குறிக்கும். அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும் பொழுது ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியாக வரிவிதிப்பு செய்து அனைத்து குடியிருப்போரிடமும் தனித்தனியாக வைப்புத்தொகை மற்றும் கட்டணம் வசூல் செய்யப்படும்.

அ) அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு குழாய் இணைப்பு வழங்கப்படும் போது எத்தனை குடியிருப்புகள் இருந்தாலும் தக்க அளவிலான குழாய் இணைப்பு மட்டுமே வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | நான்கு குடியிருப்பு வரை | 20 மி.மீ பயன் தரும் குழாய் | 1 எண்ணம் |
| | | 15 மி.மீ திருகு குறுங்குழாய் | |
| 2 | 5 முதல் 8 குடியிருப்பு வரை | 20 மி.மீ பயன் தரும் குழாய் | 2 எண்ணம் |
| | | 15 மி.மீ திருகு குறுங்குழாய் | |
| 3 | 9 முதல் 12 குடியிருப்பு வரை | 20 மி.மீ பயன் தரும் குழாய் | 3 எண்ணம் |
| | | 15 மி.மீ திருகு குறுங்குழாய் | |
| 4 | 13 முதல் 16 குடியிருப்பு வரை | 20 மி.மீ பயன் தரும் குழாய் | 4 எண்ணம் |
| | | 15 மி.மீ திருகு குறுங்குழாய் | |
| 5 | 17 முதல் 20 குடியிருப்பு வரை | 25 மி.மீ பயன் தரும் குழாய் | 5 எண்ணம் |
| | | 20 மி.மீ திருகு குறுங்குழாய் | |
| 6 | 21 முதல் 40 குடியிருப்பு வரை | 40 மி.மீ பயன் தரும் குழாய் | 6 எண்ணம் |
| | | 20 மி.மீ திருகு குறுங்குழாய் | |
| 7 | 41 முதல் 70 குடியிருப்பு வரை | 40 மி.மீ பயன் தரும் குழாய் | 7 எண்ணம் |
| | | 25 மி.மீ திருகு குறுங்குழாய் | |
| 8 | 70 குடியிருப்புகளுக்கு மேல் | 40 மி.மீ பயன் தரும் குழாய் | 8 எண்ணம் |
| | | 25 மி.மீ திருகு குறுங்குழாய் | |

6. மசூதிகள், கோயில்கள், கிருஸ்துவ ஆலயங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே ஆகும். அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் கீழ்க்கண்ட வகையில் வரைமுறைப்படுத்தப்படும்.

(அ) வீட்டு உபயோகங்களுக்காக கொடுக்கப்படும் இணைப்பு விதிகள் இவற்றிக்கும் பொருந்தும்.

7. இத்துணைவிதிகளுக்குட்பட்டு குடிநீர் குழாய்களில் உள்ள நீர் விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளில் அளவு அவற்றில் பொருத்தவேண்டிய அடைப்பான்கள், திருகுகள் மற்றும் இதர இனங்களையும், குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அங்கீகராம் பெற்றவர் நிர்ணயம் செய்வர். அதற்கு தக்கப்படி கீழ்கண்ட நிர்ணயம் அளவுகளின் படி அமைக்கப்படும்.

அ. 30 மீட்டர் வரை 15.மி.மீ குழாய் இணைப்பு – 10 மி.மீ திருகு குறுங்குழாய்

ஆ. 90 மீட்டர் வரை 20 மி.மீ குழாய் இணைப்பு – 15 மி.மீ திருகு குறுங்குழாய்

இது தவிர வேறு அளவு தேவைப்பட்டாலோ அதை முடிவு செய்த மேற்பார்வை பொறியாளர், நகராட்சி நிர்வாக் ஆணையரகம் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும். எல்லா

இணைப்புகள், திருகு குறுங்குழாய்கள் மற்றும் இதர உபகரணங்கள் சோதனை செய்து தர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது கண்காணிப்புப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதாகவோ இருத்தல் அவசியம். எக்காரணங்களைக் கொண்டும் இந்த நிர்ணய அளவு 15 எம்.எம்–க்கு மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை பொறியாளர் குறிப்பிடும்படி இந்திய நிர்ணய நிறுவனத்தின் விளக்கம் குறிப்பிற்கு உடன் பட்டதாய் இருத்தல் வேண்டும்.

8. குடிநீர் இணைப்பு எடுக்கும் தலைப்பிடத்தின் நேர் மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாயிருப்பின் அத்தகைய வீட்டு குழாய் இணைப்புகள் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளரின் ஒப்புதல் பேரில் மட்டுமே அளிக்கப்பட வேண்டும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை அளவு ஆகியவை நகராட்சி நிர்வாக ஆணையரகம் மேற்பார்வை பொறியாளரால் நிர்ணயம் செய்ததாக இருத்தல் வேண்டும்.

9. (அ) வீடுகளுக்கு கொடுக்கப்படும் இணைப்புகள் சேர்ந்த குழாய்கள், இணைப்புகள் யாவையும் நகராட்சி அதிகாரிகளால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் பார்வையிட வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளையும் பார்வையிட ஏதுவாக எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டும். அவ்வாறின்றி எங்காவது பார்வையிடுவதற்கு தடை ஏற்படுத்தப்பட்டால் அவ்விடத்தில் இணைப்பு துண்டிக்கப்படும்.

(ஆ) குடிநீர் குழாய் நீரில் மூழ்கி விடும் வகையில் அமைக்கப்பட்டிருக்கக் கூடாது. குழாயில் இருந்து சிதறும் நீர் அல்லது கழிவுநீர் மிக அண்மையில் உள்ள நகராட்சி சாக்கடை அல்லது வடிகால் அமைப்புக்கு விரைவாக சரிந்து ஓடும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

10. (அ) அளவுமானிகள் நிர்வாக அதிகாரியின் ஒப்புதலுக்கு உட்பட்டு வீடுகளின் உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் வழங்கப்பட வேண்டும். எனினும் அளவுமானிகள் எப்போதும் நகராட்சி மன்ற அதிகாரிகள் அல்லது ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது அவர்களால் மூடி முத்திரையிட்டு இருக்கும். மேலும் இந்த அளவுமானிகளை பொதுவாக அவர்களால் திங்களுக்கு ஒருமுறை கணக்கு எடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படும்.

(ஆ) அளவு மாணி குடியிருப்போர் அல்லது வீட்டு உரிமையாளர் வாங்கி பொருத்தவேண்டும். பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.5/– வசூலிக்கப்படும்.

(இ) வீடுகளின் உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் வழங்கப்படும் அளவுமானி பழுதடைந்து விட்டால் அவர் நிர்வாக அதிகாரியின் ஆணைகள் கிடைக்கப்பெற்ற இரண்டு தினங்களுக்குள் அந்த அளவுமானியை நிர்வாக அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் தமது சொந்த செலவிலேயே பழுது பார்ப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அவர் அவ்வாறு செய்யத் தவறினால் குழாய் இணைப்பை துண்டித்து விடலாம்.

(ஈ) அளவுமானி பழுதாகும் சமயங்களில் 16வது துணை விதிகளின்படி வரையறுக்கப்பட்டுள்ள விகிதங்களில் குடிநீர் கட்டணம் வசூல் செய்யப்படும்.

11 &12. குடிநீர் இணைப்பு பெறும் குடியிருப்பு, வணிக பகுதி தொழிற்சாலை பகுதி, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடியிருப்பு பகுதிகளுக்கு உபயோகத்தால் தன்மைகேற்றவாறு கீழ்காணும் விவரப்படி கட்டணம் வசூலிக்கப்படும்.

| வ.எண் | இனம் | வைப்புத் தொகை ரூ. | திருத்திய குறைந்தபட்ச மாதந்திர குடிநீர் கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1 | வீட்டிணைப்பு | 5000/= | 60.00 |
| 2 | வீட்டிணைப்பு அல்லாது வணிக இணைப்பு | 7500/= | 170.00 |
| 3 | தொழிற்சாலை | 10000/= | 270.00 |

அளவுமானி கட்டண முறையின்கீழ் செலுத்தப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் கேட்பு அறிவிப்பு அனுப்பிய நாளிலிருந்து 15 நாட்களுக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு முறை பொதுவாக 10ஆம் நாளுக்குள் அனுப்பும் குடிநீர் கட்டணம் கேட்பு அறிவிப்பு அதற்கு முந்தைய திங்கள்களில் பயன்படுத்தப்பட்ட குடிநீருக்குரியதாகும்.

(அ) மேற்கண்ட துணைவிதிகளில் சொல்லப்பட்ட கட்டணங்கள் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் நகராட்சிக்கு செலுத்தப்படாமல் இருக்குமானால் ஆணையருக்கு எப்போது வேண்டுமானலும் துண்டிக்கும் அதிகாரம் உண்டு. நிர்ணயிக்கப்பட்ட காலகெடுவுக்கு குடிநீர் கட்டணம் செலுத்தப்படாத இணைப்புகள் துண்டிப்பு செய்யும்பட்சத்தில் ஏற்படும் கால இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் நகராட்சியின் ஆணையர் பொறுப்பு அல்ல, குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர்தான் பொறு ப்பேர்க்கவேண்டும்.

(ஆ) குடிநீர் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய கால கெடுவுக்குள் செலுத்தாதவர்களின் இணைப்பு 15 ஆம் நாள் அன்று துண்டிக்கப்படும். மேற்கண்ட துண்டிப்பினால் ஏற்படும் எவ்வித இழப்பிற்கும் நகராட்சி ஆணையர் பொறுப்பேற்க மாட்டார்.

(இ) இந்த துணைவிதிகளில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களின்படி குடிநீர் வழங்குவதற்கு உரிய கட்டணம் முறைப்படி குறித்த காலத்திற்குள் செலுத்தப்படவில்லையென்றால் சொத்துவரி வசூல்செய்யும் முறையில் உள்ள விதிகளின்படி வசூல் செய்யப்படும்.

(ஈ) குடிநீர் கட்டணம் செலுத்தப்படாத காரணத்திற்காக அல்லது இத்துணை விதிகள் எதையும் மீறிய காரணத்திற்காக துண்டிக்க மற்றும் குழாய் இணைப்பினை மீண்டும் தருவதற்கு ரூ.500 (ரூபாய் ஐநூறு மட்டும்) கட்டணமாக வசூலிக்கப்படும். (துண்டிப்பு கட்டணம் ரூ.250/– + இணைபு கட்டணம் ரூ.250/–)

14. குடிநீர் உபயோகப்படுத்தாத ஒரு காலண்டின் பகுதிக்கான கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அளிக்கப்படமாட்டாது. அவ்வாறு குடிநீர் பயன்படுத்தப்படாமலிருக்கும் ஒவ்வொரு முழு காலண்டிற்கும் ஆணையர் கட்டண தள்ளுபடி வழங்கலாம். ஆனால் அவ்வாறு குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்புசெய்து கொண்டிருக்கவேண்டும். இவ்வாறு துண்டிக்கும்போது துண்டிப்பு கட்டணம் ரூ.250/– ம் மறு இணைப்பு கட்டணம் ரூ.250/–ம் ஒவ்வொரு முறையும் வசூல்செய்யப்படும்,

குறிப்பு : இந்த துணைவிதிகளில் வரும் காலண்டு என்பது மூன்று முழு நாளிட்ட திங்கள் அல்லது 90 நாட்கள் என்று பொருள் கொள்ளவேண்டும்.

15. (அ) அளவுமானிகளின் தவறான கணக்கீடுகள் அல்லது அளவுமானிகளில் எழும் பிற குறைபாடுகள் பற்றிய புகார்கள் பற்றி பாதிக்கப்பட்டவர்கள் பிரச்சினைக்கு உரிய தவறான கணக்கீடு அளவுமானியில் கணக்கு எடுக்கப்படும் நாளில் இருந்து நான்கு வாரங்கள் அல்லது 30 நாட்களுக்குள் ரூ.250 வைப்புத் தொகை செலுத்தி எழுத்து மூலம் அறிவிப்பு செய்துக் கொள்ள வேண்டும்.

(ஆ) மேற்சொன்ன காலவரைக்குள் செய்து கொள்ளப்படாத புகார்கள் மற்றும் வைப்புத் தொகை செலுத்தப்படாத புகார்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(இ) அளவுமானி தவறான கணக்கீட்டை காண்பித்தாலோ அல்லது பிறவகை குறைபாடுகளை உடையது என்றோ பரிசீலனையில் தெரிய வந்தால் உடனடியாக சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வைப்புத் தொகை திரும்ப தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

16. குழாய் இணைப்பில் உள்ள அளவுமாணி காட்டும் கணக்கீடு சரியானது இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அளவுமாணி ஒருவார காலத்திற்கு மேலாக பழுதடைந்திருந்தாலும் குடிநீர் அளவு முந்தைய ஆண்டு இதே மாதத்தில் அல்லது இதே திங்களில் பயன்படுத்தியதற்கான அளவுகளில் பதிவுகள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் ஆணையர் மிக பொருத்தமானது என கருதும் புள்ளிவிவரங்கள் அளவுகள் அந்தபிரச்சனைக்குரிய மேற்கண்ட காலகட்டங்களில் கட்டணம் வசூல் செய்வதற்கு அடிப்படையாக கொள்ளப்படும் எனவும் அவ்வாறு கணக்கிடப்படும் நீரின் அளவு அந்த கால அளவில் உண்மையில் பயன்படுத்தப்பட்ட நீர் அளவாக கருதப்பட்டு கணக்கிடப்படும். இதுகுறித்து ஆணையர் முடிவே இறுதியானதாகும்.

குழாய் இணைப்பு பெற்றுள்ளவர்கள் குடிநீர் தேவையில்லை என கருதும் பட்சத்தில் ஆணையருக்கு முன்னதாக குழாய் இணைப்பை தற்காலிகமாக மூடிவிடுமாறு எழுத்து மூலமாக மனுச் செய்ய வேண்டும். மேற்கண்டவாறு இணைப்பு துண்டிக்க ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ரூ.250ம் மீண்டும் இணைப்பு கொடுக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ரூ.250ம் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

17) வீட்டின் இணைப்புகளில் பயன் குழாயில் மின் மோட்டார் அல்லது விசை நீரேற்றும் கருவி ஆகியவைகளை பொருத்தி பயன்படுத்துவர்கள் மீது குடிநீர் திருடுவதாக கருதி கிரிமினல் சட்டபடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு அபராதமான ரூ.5,000 வசூல் செய்யப்படுவதுடன் மேற்படி மோட்டார் அல்லது விசை நீரேற்றும் கருவியை பறிமுதல் செய்யப்படும். மேலும் இணைப்பு எவ்வித முன்னறிவிப்புமின்றி துண்டிக்கப்படும்.

18) குடிநீர் குழாய்களை தொட்டி அல்லது சேமிப்பு தொட்டியுடன் நேரடியாக இணைக்கப்படலாகது. இந்த இணைப்பு துணை விதிகள் 23 மற்றும் 24க்கு பொருந்தாது

19) நகராட்சியிலிருந்து வீட்டுக் குழாய் இணைப்பு கொடுக்கப் பெற்ற ஒவ்வொருவரும் அதனை நல்ல முறையில் பேணி வருவதுடன் பழுதுகள் ஏற்பட்டால் அதை தமது செலவில் பார்த்துக் கொள்ள வேண்டும்.

20) (அ) வீட்டுக் குழாய் இணைப்பின் நிலையை பரிசீலிக்கும் பொருட்டு வீட்டுக் குழாய் இணைப்பு தொடர்பாக ஒரு குழாய் இணைப்பை எந்த சந்தர்ப்பத்திலும் ஆணையர் அகற்றலாம். அவ்வாறு பரிசீலனை செய்யும் போதோ அல்லது வேறு விதத்திலோ குழாய்கள் அல்லது இணைப்பு ஏதோ ஒரு வகையில் பழுதுற்றிருப்பதாக அறியப்பட்டால் ஆணையாளர் வீட்டின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு குறிப்பிட்ட ஒரு காலவரையறைக்குள் பழுதினை நீக்கி இணைப்பு அல்லது குழாய்களை சரி செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி அறிவிப்பு ஒன்று கொடுக்க வேண்டும். அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் பழுதகற்றும் வேலை நிறைவேற்றப்படாவிட்டால் அப்பழுதின் காரணமாக நீர் விரையமாகும் என்றோ அல்லது நீரின் தூய்மை கெட்டு விடக்கூடும் என்றும் ஆணையாளர் உணர்ந்தால் அத்தகைய பழுதகற்றும் வேலையை தாமாகவே நிறைவேற்றி அதற்கான செலவினை அந்த இணைப்பின் உரிமையாளரிடமிருந்தோ, குடியிருப்பாளரிடமிருந்தோ வசூலிக்கலாம். அல்லது இணைப்பை துண்டித்து அந்த வீட்டு இணைப்பிற்கு நீர் வழங்குவதை நிறுத்தி விடலாம்.

(ஆ) மேலும் இத்தகைய பரிசீலனையின் போது ஒப்புதல் பெறாத குழாய் சேர்க்கைகள், மாற்றங்கள் அல்லது நீடிப்புகள் செய்யப்பட்டிருப்பதாக தெரிய வருமாயின் மேற்கண்ட தவறுகளுக்குரிய வீட்டிணைப்பின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு 24மணி நேர அறிவிப்பு கொடுத்து விட்டு குழாய்களுக்கு நீர் வழங்கும் இணைப்பையும் துண்டித்து விடலாம்.

21. குடும்ப பயன்களுக்காக வழங்கப்பட்ட வீட்டு இணைப்பில் இருந்து கிடைக்கும் குடிநீரை ஆணையரின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி குடும்ப பயன்களில்லாத பிற காரியங்களுக்கும் பயன்படுத்தக் கூடாது. ஆனால் ஒரு குழாய் இணைப்பின் உரிமையாளர் இணைப்புள்ள வீட்டில் குடியிருப்பாளர் குடும்ப பயன்களுக்கான குடிநீரை அவையல்லாத பிறவற்றிற்கு பயன்படுத்துவதாக ஆணையர் அறியவரினும் அல்லது அவ்வாறு நம்புவதற்கு காரணங்கள் இருந்தாலும், அவர் தான் அறிவிக்கும் நாளில் இருந்து துணைவிதி 12ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்பபயன்களுக்கு அல்லாத விகிதத்தில் கட்டணத்தை செலுத்துமாறு உரியவரை தன்னுடைய ஆதாரப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் கேட்டுக் கொள்ளலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வீட்டிணைப்பின் உரிமையாளர், குடியிருப்பாளர் செலுத்தத் தவறினால் அந்த வீட்டிணைப்பை துண்டித்துவிட ஆணையர் உத்திரவிடலாம்.

22. நகராட்சியிலிருந்து பெறப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பில் யாதொரு கருவியை வைத்து நீரேற்று குழாய் அமைத்தல் அல்லது வரிசை நீரேற்றும் கருவி இணைப்பு குழாய் அல்லது விசையும் குழாய் அதுபோன்ற எந்த ஒரு அமைப்பையும் குடிநீர் இணைப்பில் பொருத்தி பெரும் குழாயில் இருந்து குடிநீர் உறிஞ்சகூடாது அவ்வாறு ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் மின்மோட்டர் மற்றும் ஏனைய கருவிகள் பறிமுதல் செய்யப்படும். பொருட்கள் யாதும் திருப்பி தரப்படமாட்டாது. மீண்டும் மின்இயக்கி மற்றும் ஏனைய கருவிகள் பொருத்தமாட்டேன் என்ற உத்திரவதத்துடன் ரூ. 5000/– அபராத தொகை பெற்றுக்கொண்ட பின்புதான் இணைப்பு வழங்கப்படும். இரண்டாவது தடைவையாக குடிநீர்

இணைப்புகளில் மின் கருவிகளை வைத்து ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணபிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைத்திருப்பதுடன், வெளிசெல்லும் கழிவுநீரை வெளியேற்ற புதைவடிகால் திட்டம் நடைமுறைப்படுத்த இருக்கும் நிலையில் நகராட்சி தெரிவிக்கும் வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை செலுத்தி புதை வடிகால் இணைப்பிற்கும் விண்ணப்பம் செய்யவேண்டும். மேலும் விண்ணப்பிக்கும் பகுதியில் இத்திட்டம் இல்லாதிருந்தால் வெளியேறும் கழிவுநீரை தனியாக தொட்டி (Cess pool) வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எவரும் வீட்டு பயன் இணைப்பிற்கான அங்கீகரிக்கப்பட்ட குழாயுடன் இணைப்பு குழாய் அல்லது அசையும் குழாய் அல்லது அது போன்ற ஏதாவதொரு அமைப்பை இணைத்து நகராட்சி குடிநீர் திட்ட பெருங்குழாயில் இருந்து குடிநீர் ஈர்க்கக் கூடாது. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

23 பொது கழிப்பிடம், சிறுநீர் கழிக்கும் இடம், மலகழிப்பிடம் ஆகியவற்றிற்கு குடிநீர் குழாயிலிருந்து இணைப்பு கொடுக்கப்படவேண்டுமானால் இதற்காக ஒரு தொட்டியை அமைத்து அதற்கு தேவையான உபகரணங்களுடன் பொருத்தி நகராட்சி பொறியாளர் முடிவுசெய்யும் இடத்தில் நிறுவப்படவேண்டும்.

24 கொதி கலன்களுக்கு நகராட்சியின் பகிர்மான குழாய்களிலிருந்து தேவைப்படுமானால் அதற்காக தனியாக தொட்டியிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர குழாயிலிருந்து நேரடி இணைப்பு வழுங்கப்படமாட்டாது. ஒவ்வொரு தொட்டிக்கும் தனியாக பந்து திறப்பான், கண்காணிக்கும் அல்லது எச்சரிக்கை சாதனங்கள் பொருத்தப்பட்டு அவைகளை சரியான முறையில் அனுகி ஆய்வு செய்வதற்கு தகுந்தவாறு அமைக்கப்பட வேண்டும்.

25 தீ விபத்து நேரிடும் போதன்றி பிற சந்தர்ப்பங்களில் ஆணையர் / பொறியாளர் அவர்களிடம் முறையாக அதிகாரம் பெறாத எவரும் நகராட்சி மன்ற குடிநீர் வாங்கும் திட்டத்தில் நீர் பெருங்குழாய் அல்லது பகிர்வு குழாய்கள் அல்லது தடுக்கிதழ்கள் அல்லது தீயணைக்கும் நீராவிப்பால் ஆகியவற்றை எல்லாவிதத்திலும் நிறுத்தக்கூடாது அல்லது இவற்றின் போக்கில் தடை ஏற்படுத்தல் கூடாது.

26 திருமணம் அல்லது பிற சந்தர்ப்பங்களில் ஒரு கட்டிடத்திற்கு குடிநீர் வழங்கும் பொருட்டு தற்காலிகமாக அமைக்கப்படும் ஒவ்வொரு இணைப்பிற்கும் இணைப்பு ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.100 என்ற வீதத்தில் கட்டணம் விதிக்கப்படும். அத்துடன் நீர்ப் பெருங்குழாயுடன் மேற்கெண்ட இணைப்பை ஏற்படுத்த ரூ.250ம் பின்னர் இந்த இணைப்பை அகற்றவும் ரூ.250ம் கட்டணமாக விதிக்கப்படும். அத்தகைய இணைப்பு ஒவ்வொன்றுக்கும் 15 மி.மீ அளவுள்ள 3 மீட்டர் நீளம் அளவுள்ள சேதமற்ற குழாய் ஒன்றை கொண்டதாயும் இருக்கும். இந்த இணைப்பிற்காக தேவைப்படும் எல்லாப் பொருட்களையும் அதற்கான பணியினையும் அந்த இணைப்புகளை கொடுக்குமாறு விண்ணப்பித்து கொண்டவர்களே அவர்களின் செலவில் ஏற்பாடு செய்ய வேண்டும். கூடுதலாக தேவைப்படும் இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன்

பகுதிக்கு ரூ.100/– வீதம் கட்டணம் விதிக்கப்படும் மேற்படி தற்காலிக இணைப்பின் காலம் ஒவ்வொரு தருணத்திலும் 5 நாட்களுக்கு மேற்படக் கூடாது.

27) (அ) அளவுமானியின் மீது உள்ள முத்திரையை அல்லது பூட்டை உடைக்கக் கூடாது அல்லது குறிப்பெண்கள் உள்ள முகப்பின் மீதிருக்கின்ற கண்ணாடியை உடைக்கக் கூடாது அல்லது அளவுமானியினை திறக்கக்கூடாது, அல்லது அளவுமானி ஒன்றின் குறிப்பின் பகுதியனை மாற்றக்கூடாது, அல்லது வழங்கும் குடிநீரின் அளவை முறையாக பதிவு செய்யும் பகுதியில் தடை உண்டாக்கக் கூடாது

(ஆ) வழங்கப்படும் குடிநீரை அளவிடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள அளவுமானியில் பதிவு செய்யப் படுவதற்கு முன் குடிநீரை எடுப்பதை தவிர்க்கவேண்டும்

(இ) வழங்கப்படும் குடிநீரின் அளவை அளவுமானி பதிவு செய்யாமல் இருக்கும் பொருட்டு அளவுமானியை களவாடி செல்லப்படுவதையோ அல்லது அளவுமானிக்கு சேதம் விளைவிக்கப்படுவதையோ அனுமதிக்கப்படக் கூடாது அல்லது அதற்கு காரணமாகவும் இருக்கக் கூடாது.

28. புதியதாக குடிநீர் இணைப்பு பெற விரும்புகிறவர்கள் நகராட்சிக்கு நடப்பு நிதியாண்டு முடிய உள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள், வரியில்லா இனங்கள் ஆகியவைகளை செலுத்தி இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அ. இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால் கொடுக்கப்பட்ட எல்லா குடிநீர் இணைப்புக்கும் குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்காக கொடுக்கப்படும் இணைப்புகளுக்கு பொருந்தும் எனவும் துணை விதிகளின்படி மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்களிலும் பொருந்தும் அவ்வாறு உள்ள வீட்டு இணைப்புகள் பயன்படுத்தப்பட வேண்டுமானால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய எல்லா கட்டணங்களையும் குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் ஏற்றுக்கொண்டதால் வீட்டு இணைப்புகள் அதிகாரபூர்வமாக செல்லத்தக்கதாய் ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறினால் இந்த இணைப்புகள் நகராட்சியின் ஒப்புதல் பெறாத இணைப்புகளாய் கருதி வீட்டு உபயோக இணைப்புகளுக்கு அபராத தொகையாக நாளொன்றுக்கு ரூ.3000/– குடியிருப்பு இல்லாத வணிகம் மற்றும் தொழிற்சாலை இணைப்புக்கு நாளொன்றுக்கு ரூ.5000/– வீதம் வசூல் செய்யப்படும் தொடர்ந்து குற்றம் செய்யப்படும் பட்சத்தில் குழாய் இணைப்பு நிரந்தரமாக துண்டிக்கப்படும்.

ஆ. குடிநீர், இணைப்புகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த செயல்முறைகள் திருத்தப்பட்ட துணை விதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து செல்லத்தக்கவை ஆகாது.

29. ஒவ்வொரு இணைப்பின் தகுதியை ஒட்டி, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையில், அரசினருக்கு உரிமையான, அளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய எல்லா நிறுவனங்களுக்கும் இத்துணை விதிகள் பொருந்தும்.

30. (அ) மேற்காணும் துணை விதிகளை மீறும் அல்லது சேதமிழைக்கும் எவரும் கீழ்க்கண்டவாறு தண்டனைக்கு உரியவராவார்.

(ஆ) துணை விதி 22ல் தெரிவிக்கப்பட்ட குற்றம் நீங்கலாக மற்ற தவறுகள் செய்வோருக்கு ரூ.3,000 அபராதம் விதிக்கப்படும். முதலில் செய்யப்பட்ட குற்றத்திற்கான தீர்ப்பு கூறப்பட்ட பின்பும் தொடர்ந்து குற்றம் செய்யப்படும் பட்சத்தில் தொடர் அபராதமாக ரூ 100/– நாள் ஒன்றிற்கு வசூலிக்கப்படும். மேலும் தொடர்ந்து குற்றம் செய்யப்படும் போது இணைப்பு நிரந்தரமாக துண்டிப்பு செய்யப்படும். நீதித்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

31. குடிநீர் திட்டத்திற்கென்று நிர்ணயிக்கப்பட்டுள்ள மொத்த வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு மேல் வழங்க இயலாத நிலையிலும் தொழில்நுட்ப காரணங்களுக்காக வீட்டு குடிநீர் இணைப்பு வழங்க இயலாத சூழ்நிலையிலும் குடிநீர் இணைப்புகளை மேலும் வழங்காமல் நிறுத்தி வைக்கும் அதிகாரம் ஆணையருக்கு உண்டு.

32. குடிநீர் திட்டத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய், மதகுகள், நீரேற்று நிலைய ஆகியவற்றில் நகராட்சி பணியாளர்களை தவிர்த்து மற்ற யாதொரு நபர்களும் கையாளக்கூடாது. மேல்நிலைத் தொட்டிக்கு குடிநீர் செல்லும் பிரதான குழாயிலிருந்து குழாய் இணைப்பு கண்டிப்பாக வழங்கப்பட மாட்டாது.

33. நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, உரிமம் மற்றும் வேறு ஏதேனும் கட்டணம் போன்றவைகளை செலுத்தாமல் காலம் தாழ்த்தும் பட்சத்தில் மேற்படி நபருக்கு சொந்தமான/குடியிருக்கும் வீட்டின் குழாய் இணைப்பு துண்டிக்க 24 மணி நேர அவகாசம் அளித்து உத்திரவு அளிக்கப்பட்ட பின்னர் இணைப்பு துண்டிக்கப்படும்.

## பொது நீர் குழாய்களுக்கான துணை விதிகள்

1. எவரும் பொது நீர் குழாயில் இருந்தோ, தீயணைப்புக் குழாயில் இருந்தோ வேண்டுமென்றோ அல்லது அசட்டையாகவோ குடிநீர் ஓடும்படி விடக் கூடாது.

2. (அ) எவரும் 30 லிட்டர் கொள்ளளவிற்கு மேற்படாத பாத்திரங்களால் அன்றி வேறொன்றினாலும்நீர்க்குழாயில் இருந்து குடிநீரை பிடித்தல் கூடாது.

   (ஆ) குடும்ப பயன்களுக்காக அன்றி பிற உபயோகங்களுக்காக பொதுக்குழாயில் இருந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

   (இ) பொது நீர் குழாயிலோ அல்லது கால்நடை நீர்த் தொட்டியிலோ எவரும் குளிப்பதோ, துவைப்பதோ அல்லது வண்டிகளை கழுவுவதோ, பிராணிகளை குளிப்பாட்டவோ கூடாது.

   (ஈ) மற்றவர்கள் காத்திருக்கையில் பொது நீர்க் குழாயில் இருந்து ஒரு முறைக்கு மேல் தொடர்ந்து குடிநீர் பிடிக்கக் கூடாது.

3. விபத்து நேரிட்ட நேரங்களில் நீர் அனைப்பதற்கு அன்றி பிற காரியங்களுக்காக எவரும் கால்நடை நீர் தொட்டியிலிருந்தோ அல்லது தீயணைப்பிற்காக பொறுத்தப்பட்டுள்ள வளைகுழாய் இணைப்பிலிருந்தோ நீர் எடுக்கப்படக் கூடாது.

4. தீ விபத்தின் போது தீயை அணைப்பதற்காகவே அன்றி மற்றபடி எவரும் பொது நீர்க் குழாயிலிருந்தோ தீயணைப்புக் குழாயிலிருந்தோ தொடர்ந்து நீர் எடுக்கும் வகையில் அவற்றை இயக்கக் கூடாது. தீயை அணைப்பதற்காக அன்றி பறி உபயோகங்களுக்காக பொதுநீர்க் குழாய் அல்லது தீயணைப்பு குழாயிலிருந்து சுயநல அடிப்படையோடு தொடர்ந்து ஒருவரால் நீர் எடுக்கப்பட்டால் அவர் இத்துணை விதியை மீறி நடந்ததாக கருதப்படுவதோடு நகராட்சிகளின் சட்ட விதிப்படி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அருவருக்கதக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய தொற்றுநோய் உள்ள எவரும் பொதுநீர்க் குழாய் அல்லது கால்நடை நீர்த் தொட்டியை அல்லது தீயணைப்பு வளை குழாய் இணைப்பை பயன்படுத்துதல் கூடாது

6. அருவருக்கதக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் அல்லது தொற்று நோய் உள்ள பிராணி ஒன்றையோ அல்லது மேற்சொன்ன நோய்களால் ஏதாவது ஒரு நோய் பற்றக்கூடும் என்று அவருக்கு தோன்றக்கூடிய அல்லது அவருக்கு தெரிந்திருக்கக்கூடிய ஒன்றையோ பொது நீர்க்குழாய் அல்லது கால்நடை நீர்த்தொட்டி அல்லது தீயணைப்பு வளைகுழாய் இணைப்புக்கு அல்லது அதன் அருகே கொண்டு செல்லக்கூடாது.

7. பொது நீர்க்குழாய் அல்லது கால்நடை நீர்த் தொட்டியையோ அல்லது அவற்றை சுற்றியோ எவரும் அசுத்தம் செய்தல் கூடாது. இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் நகராட்சிகளின் சட்டப்படி அவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

8. தீ விபத்து நேரிடும் போதன்றி நிர்வாக ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட எவரும் நீர்த்தேக்கம் பெருங்குழாய், குடிநீர் குழாய் தடுக்கிதழ்கள் தீயணைப்பு வளைவுக்குழாய் இணைப்பு அல்லது பிறகுழாய் இணைப்புகளை திறப்பதோ அல்லது நீர் வழங்கும் திட்டத்தில் இணைக்கப்பட்டு பொது நீர்குழாய் அல்லது தீயணைப்பு வளைகுழாய் இணைப்புகளிலிருந்து நீர் உறிஞ்சுவதோ அல்லது அவைகளுக்கு சேதம் விளைவிப்பதோ கூடாது.

9. பொதுக்குடிநீர் குழாய் அமைக்கும் இடத்தை சுற்றி வரிசைகள் போடுவதோ, வரிசைக்காக உடைந்த குடங்கள், டப்பாக்கள், மற்றும் இதர பொருட்கள் வைக்கக்கூடாது பொதுக்குடிநீர் குழாயில் குடங்களைக் கழுவி குடிநீரை வீணாக்கக்கூடாது.

**தண்டனை**

இந்த துணை விதிகளில் எந்த ஒன்றையேனும் மீறி நடப்பவர் எவராயினும் மேலும் 7 வயதுக்குட்பட்ட குழந்தையை தன் பொறுப்பிலே கொண்ட எவரும் அக்குழந்தை மேற்கண்ட துணைவிதியை மீறி நடக்காமல் தடுத்து நிறுத்தத் தவறினாலும் அவர் தண்டனைக்கு உரியவர் ஆவர். அவருக்கு 1,000 ரூபாய் வரையிலும் அபராதம் விதிக்கப்படும். மேற்சொன்ன துணைவிதிகளை தொடர்ந்து மீறப்படுமாயின் முதல் முறை மீறி நடந்ததற்காக அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு தொடர்ந்து மீறப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபாய் 100 அபராதம் விதிக்கப்படும்.

என்.எஸ்.பிரேமா
ஆணையர் (பொ)
மறைமலைநகர் நகராட்சி.

காஞ்சிபுரம்,
2011 நவம்பர் 28.

(லேசர் அச்சடிப்புகள் மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம்)
தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.

படிவம் –அ
விண்ணப்ப படிவம்
மறைமலைநகர் நகராட்சி

அனுப்புனர்

பெறுநர்

செயல் அலுவலர்

மறைமலைநகர் நகராட்சி

வீட்டு உரிமைதாரர் / குடியிருப்போர் ஆகிய நான் மேற்காணும் முகவரியில் புதிய வீடு / வணிகம் / தொழிற்சாலை குடிநீர் இணைப்பு வழங்க கேட்டுக் கொள்கின்றேன்.

குடிநீர் வழங்கல் துணை விதிகளின்படி என்னால் பயன்படுத்தப்படும் குடிநீருக்கான கீழ்கண்ட கட்டணங்களை நாராட்சி தகவல் மையத்தில் தெரிவித்துள்ளவாறு செலுத்த ஒப்புக்கொள்கின்றேன்.

| | | |
|---|---|---|
| 1 | <u>வைப்புத் தொகை</u> | |
| | அ) வீட்டுப்பயன்பாடு | |
| | ஆ) வீட்டுப்பயன் பாடல்லாதவை | ரூ. |
| | இ) தொழிற் சாலை | |
| | ஈ) கல்யாண மண்டபம் | |
| 2 | சொத்து வரி நிலுவைத் தொகை (அந்த அரையாண்டு முடிய) | ரூ. |
| 3 | சாலை சீரமைப்பு கட்டணம் (குறிப்பில் தெரிவித்துள்ளவாறு) | |
| 4 | நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய மேற்பார்வைக் கட்டணம் (குடிநீர் துணை விதிகளில் குறிப்பிட்டவாறு) | ரூ. |
| | நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய மொத்த தொகை | ரூ. |

மேலும் குடிநீர் துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளை பின்பற்றுவேன் என்று உறுதியளிக்கின்றேன். ஏதேனும் நிகழ்வில் குடிநீர் இணைப்பினை நீக்கம் (Cancel) செய்வதாக இருந்தால் ஆணையர், பொறியாளர் அல்லது உரிய அலுவலர்களுக்கு ஒரு மாதம் முன்னதாக எழுத்து மூலம் தகவல் அளிக்கின்றேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

விண்ணப்பதாரர் கையொப்பம்

(உரிமைதாரர்/குடியிருப்போர்)

இடம்

நாள்.

குறிப்பு: விண்ணப்பதாரர் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்த வேண்டும். (சாலைக்கட்டணம் 2009–2010ம் ஆண்டிற்கான கட்டணம்) சாலையின் தன்மை மற்றும் சீரமைக்க வேண்டிய நீளம் ஆய்வின் போது வேறுபடுமாயின் அதற்கான கூடுதல் தொகையை செலுத்த உறுதியளிக்கிறேன்.

| 1. | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார்சாலை ரூ. | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|---|
| | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 1,050 | 2,250 | 2,600 |
| | 30 அதிகமாக – 90 மீட்டர் நீளத்திற்கு | 1,650 | 2,850 | 3,200 |